

# செந்தூலில் அந்நியப் பிரஜைகளின் 27 கட்டமைப்புகள் தகர்ப்பு

கோலாலம்பூர், ஜூன் 7-

செந்தூல் வட்டாரத்தில் மூன்று மளிகைக்கடைகள், ஒரு சூராவ், ஓர் உலோக மறுசுழற்சி வர்த்தகத் தளம் உள்ளிட்ட அந்நியப் பிரஜைகளுக்குச் சொந்தமான 27 குடியிருப்பு கட்டமைப்புகளை கோலாலம்பூர் மாநகர் மன்றத் தரப்பு (டிபிகேஎல்) தகர்த்தெறிந்தது.

நேற்றுக் காலை பண்டார் பாரு செந்தூல், ஜாலான் 1/48ஏ எனுமிடத்தில் அமலாக்கத் தரப்பினருடன் இணைந்து இந்தக் கட்டுமான உடைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

1974 கட்டட, சாலைச் சட்டம் பிரிவு 46 (1) (ஏ) கீழ் உள்ள குற்றங்களின் அடிப்படையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதில் டிபிகேஎல் தரப்பில் இருந்து அமலாக்கம், தொழில்நுட்ப - மின்னியல் பொறியியல், தர மதிப்பீடு உள்ளிட்ட பிரிவினரும் பத்து கிளைப் பிரிவினரும் பங்கேற்றனர்.

அவர்களுடன் கோலாலம்பூர் கூட்டரசுப் பிரதேச நில அலுவலகம், போலீஸ், ஆயர் சிலாங்கூர், டிஎன்பி நிறுவனத் தரப்பினரும் பங்கேற்றதாக மாநகர் மன்றத் தரப்பு தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.